சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி– திருப்பூர் மாவட்ட வருவாய் அலகு– திரு.இ.அஹமது முஸ்தபா, ம/பெ. காலஞ்சென்ற திருமதி.சா.சமீமாபர்வீன்– கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,

பணிகள் அலகு, பணி–9(2) பிரிவு

அரசாணை (3டி) எண்.51

நாள் 21.03.2023.
சுபகிருது வருடம், பங்குனி–7,
திருவள்ளுவராண்டு 2054.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ஆகு3/29517/2021, நாள் 03.10.2022.

******

ஆணை:–

திருப்பூர் மாவட்ட வருவாய் அலகில், கிராம நிருவாக அலுவலராகப் பணியாற்றி பணியிடையே 01.10.2017 அன்று காலமான திருமதி.சா.சமீமாபர்வீன் என்பவரின் கணவர் திரு.இ.அஹமது முஸ்தபா என்பவர் தனக்கு கருணை அடிப்படையில், பணிநியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் விண்ணப்பம் அளித்திருந்தார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், திருப்பூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டு, தனியர் 22.02.2021 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திரு.இ.அஹமது முஸ்தபா என்பவரை திருப்பூர் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 22.02.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வேண்டி திருப்பூர் மாவட்ட ஆட்சியர், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையருக்கு முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

2. திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ஏற்று, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

//த.பி.பா//